ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2265/12 – 2022 ජනවාරි මස 31 වැනි සඳුදා – 2022.01.31

2265/12 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

2002, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதிய 1233/8 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக் கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் 1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன,  
காணி அமைச்சர்.

எனது இல. : 13/99/HW/113.  
பிர. செய. இல. : RDA/ LA/ 98/ 44.  
காணி அமைச்சு,  
“மிஹிகத மெதுர”, காணிச் செயலகம்,  
இல. 1200/6  
ரஜமல்வத்தை வீதி,  
பத்தரமுல்லை,  
2022, சனவரி 15.

**அட்டவணை I**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், திம்பிரிகஸ்யாய (பிரிவு இல. 40, திம்பிரிகஸ்யாய பிரிவு இல. 41, கிருல கொழும்பு மாநகர சபை எல்லையினுள், கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2014.05.17 ஆந் திகதிய ஆ.வ.கொ 8708 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டு :

**01. துண்டு இல. 227 - வரி மதிப்பீட்டு இல. 364, திம்பிரிகஸ்யாய வீதி - விஸ்தீரணம் : 0.0348 ஹெக்டயார்**

வடக்கு : சுனேத்ரா வீதி மற்றும் துண்டு இல. 226 ; கிழக்கு: வரி மதிப்பீட்டு இல. 364, திம்பிரிகஸ்யாய வீதி மற்றும் சுனேத்ரா வீதி ; தெற்கு: வரி மதிப்பீட்டு இல. 364, 314, திம்பிரிகஸ்யாய வீதி மற்றும் துண்டு இல. 228 ; மேற்கு: துண்டு இல. 228, 229 மற்றும் 226.

EOG 01 - 0334

1A – G 35960 – 20 (2022/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.